D.T. NEXT
Dated: 02.01.2025

# Two Leaves: OPS files plea in poll panel

**CHENNAI:** Former chief Minister and ousted AIADMK leader O Panneerselvam has filed a petition with the Election Commission of India over the allotment of the 'Two Leaves' symbol.

According to a *Thanthi TV* report, the petition claimed that once primary members select party leadership, the leadership cannot be dissolved or invalidated by special resolution of general body for five years.

He further stated that the present leadership is operating illegally and does not have the authority to use the 'Two Leaves' symbol. He went on to say that the Election Commission of India has to revoke the authority granted to present AIADMK general secretary Edappadi K Palaniswami from using the symbol.

On December 23 and 24, multiple petitions were submitted to the EC by representatives of both sides.

DAILY THANTHI Dated: 02.01.2025

### இரட்டை இலை சின்னம் விவகாரம்:

# தேர்தல் கமிஷனுக்கு எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் கடிதம்

புதுடெல்லி, ஜன.2-

இரட்டை இலை சின்னம் விவகார வழக்கில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தேர்தல் கமிஷனுக்கு கடிதம் அனுப்பி உள்ளனர்.

## தேர்தல் கமிஷன் விசாரணை

அ.தி.மு.க. உட்கட்சி விவகாரங்கள் முடிவுக்கு வரும் வரை இரட்டை இலை சின்னத்தை யாருக்கும் வழங்கக் கூடாது என திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் தொடர்ந்த வழக்கில் தேர்தல் கமிஷன் 4 வாரங்களுக்குள் முடிவை எடுக்க வேண்டும் என ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதன் அடிப்படையில் தேர்தல் கமிஷன் விசாரணை நடத்தி வருகிறது. இதனையடுத்து கடந்த மாதம் 23 மற்றும் 24-ந்தேதிகளில் டெல்லியில் உள்ள இந்திய தேர்தல் கமிஷனில் நேரடி விசாரணை நடைபெற்றது. இதில் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அவர்களது தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

## நிராகரிக்க வேண்டும்

இதற்கிடையே எடப்பாடி பழனிசாமி மூலம் தேர்தல் கமிஷனில் ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. அதில் கட்சியின் உள் விவகாரங்களில் தேர்தல் கமிஷன் தலையிட முடியாது என்றும், "பொதுக்குழு தீர்மானங்களை சென்னை ஐகோர்ட்டு அங்கீகரித்து உள்ளது.எனவே அ.தி.மு.க.வில் உறுப்பினர் இல்லாதவர்களின் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டு இருப்பதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதைப்போல முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சார்பிலும் கடிதம் அனுப்பப்பட்டு இருக்கிறது. அதில், 'நிலுவை வழக்குகள் முடிவுக்கு வரும் வரை எடப்பாடி பழனிசாமிக்கு வழங்கப்பட்டு உள்ள கட்சி அதிகாரங்களை திரும்பப் பெற வேண்டும் என்றும், அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளராகதான் தேர்வு செய்யப்பட்டதே சட்டபூர்வமானது. எனவே சின்னத்தை தனக்கே வழங்க வேண்டும் எனவும் ஓ.பன்னீர்செல்வம் கூறியிருப்பதாக தெரிகிறது.

DINAMALAR Dated: 01.01.2025

# தேர்தல் கமிஷனுக்கு பழனிசாமி கடிதம்

சென்னை, ஜன. 1-

'உட்கட்சி விவகாரங்களில், தேர்தல் கமிஷன் தலையிட முடியாது' என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி கடிதம் எழுதியிருப்பதாக, தகவல் வெளியாகி உள்ளது.

இரட்டை இலை சின்னம் தொடர்பாக, புகார் கொடுத்தவர்கள் அனைவரிடமும் விசாரித்து முடிவெடுக்கும்படி தேர்தல் கமிஷனுக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன் அடிப்படையில், அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், சூர்யகுமார், வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்யன், முன்னாள் எம்.பி., கே.சி.பழனிசாமி, புகழேந்தி உள்ளிட்டோர் விளக்கம் அளிக்கும்படி, தேர்தல் கமிஷன், 'நோட்டீஸ்' அனுப்பியது.

அனைவரும் தங்கள் தரப்பு விளக்கத்தை அளித்துள்ளனர். இந்த விவகாரத்தில், தேர்தல் கமிஷனுக்கு அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி கடிதம் எழுதி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

அ.தி.மு.க., உட்கட்சி விவகாரங்கள் தொடர்பாக வழக்கு தொடர்ந்தவர், கட்சி உறுப்பினர் இல்லை, கட்சியின் அனைத்து உறுப்பினர்கள் சார்பில், வழக்கு தொடர்ந்துள்ளதாக அவர் கூறுவதை ஏற்கக்கூடாது.

கட்சி விதிகளில் திருத்தம் செய்து, 2022 பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை, சென்னை உயர் நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. இரட்டை இலை சின்னம் தொடர்பான வழக்கில் மட்டுமே தேர்தல் கமிஷன் தலையிட முடியும். உட்கட்சி விவகாரங்களில் தலையிட முடியாது.

அதற்கு சட்டத்தில் இடம் இல்லை. எனவே, கட்சியில் உறுப்பினராக கூட இல்லாத நபர் தொடர்ந்துள்ள வழக்கை நிராகரிக்க வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்.

DINAMALAR Dated: 02.01.2025

# 'இரட்டை இலையை பயன்படுத்த பழனிசாமிக்கு தடை விதிக்கணும்'

சென்னை, ஜன. 2-

'இரட்டை இலை சின்னத்தை பழனிசாமி பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்' என, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் தரப்பில், தேர்தல் கமிஷனிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இரட்டை இலை சின்னம் தொடர்பாக, புகார் மனு அளித்தவர்கள் அனைவரிடமும் விசாரித்து, உரிய முடிவு எடுக்கும்படி, தேர்தல் கமிஷனுக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன் அடிப்படையில், அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட பலரிடமும், தேர்தல் கமிஷன் விளக்கம் கேட்டுள்ளது. அவர்கள் தரப்பில், நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து, எழுத்துப்பூர்வமாக



பன்னீர்செல்வம்

தங்கள் வாதத்தை தாக்கல் செய்ய, தேர்தல் கமிஷன் அறிவுறுத்தியது.

அதன் அடிப்படையில், பழனிசாமி தரப்பில், 'உட்கட்சி விவகாரத்தில் தலையிட, தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் கிடையாது. கட்சியில் உறுப்பினராக அல்லாதவர், சின்னம் குறித்து கேள்வி எழுப்ப முடியாது' என, பதில் அளிக்கப்பட்டுள்ளது.

பன்னீர்செல்வம் தரப்பில் அளித்துள்ள மனு:

ஒருமுறை முதன்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி தலைமை, ஐந்து ஆண்டுகள் செயல்பாட்டில் இருக்கும். அதை பொதுக்குழுவின் ஒரு சிறப்பு தீர்மானம் வழியாக கலைத்து விடவோ, செல்லாது என்று முடக்கி விடவோ முடியாது.

தற்போதுள்ள கட்சி நிர்வாகம் என்பது சட்ட விரோதமானது. அவ்வாறு செயல்படும் கட்சி தலைமைக்கு, இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்தும் அதிகாரம் கிடையாது.

எனவே, தற்போதைய அ.தி.மு.க., கட்சி மற்றும் இரட்டை இலை சின்னத்தை, பழனிசாமி பயன்படுத்த தடை விதிக்க வேண்டும். அந்த அதிகாரத்தை, தேர்தல் கமிஷன் திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR Dated: 02.01.2025

# 'வாக்காளர் அடையாள அட்டை மட்டுமே ஓட்டளிக்கும் முறையை உறுதி செய்யாது'

புதுடில்லி, ஜன. 2-

"வாக்காளர் அடையாள அட்டை மட்டுமே, ஒருவர் ஓட்டளிக்கும் முறையை உறுதி செய்யாது; சம்பந்தப்பட்டவர்களின் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவது அவசியம்," என, டில்லி தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

டில்லியில் விரைவில் சட்டசபை தேர்தல் நடக்கவுள்ளது. இந்நிலையில், திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் பணியில் டில்லி தேர்தல் கமிஷன் ஈடுபட்டுள்ளது. வாக்காளர்களை சரிபார்க்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அந்தந்த பூத் அலுவலர்களால், கடந்த ஆக., – அக்., வரையிலான காலகட்டத்தில் வாக்காளர்களை சேர்க்கும் பணியும், பட்டியலில் இல்லாத நபர்களை நீக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, வரும் 6ம் தேதி புதிய பட்டியல் வெளியாக உள்ளது.

இது குறித்து டில்லி தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்படுவதாவது:

கடந்த அக்., 29ல் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில், பெயர் இல்லாதவர்களை சேர்க்கும் பணி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

வரும் 6ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே வெளியிடப்பட்ட பட்டியலில் பெயர் இல்லாதவர்கள், 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் தங்கள் பெயரை பட்டியலில் சேர்க்கவும், இறந்தவர்களின் பெயரை நீக்கவும், அதற்கான படிவத்தை பூர்த்தி செய்து, தேர்தல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

வாக்காளர் அடையாள அட்டை இருந்தால் மட்டுமே, ஓட்டளிக்கும் முறை உறுதி செய்யப்படாது. வாக்காளர் பட்டியலிலும் உங்கள் பெயர் இடம்பெற்றிருத்தல் அவசியம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.